www.padippakam.com

தாஸ்னா உறுப்பிதழ்

# சிந்தனைச் செய்தி

இருமாத இதழ்

இதழ் எண் : 1 நவம்பர் - டிசம்பர் 1991 செய்தி : 1



## சி. சு. செல்லப்பா

60 ஆண்டுகளாகத் தமிழ் மறுமலர்ச்சி இலக்கிய வளர்ச்சிக்குப் பணியாற்றும் 'மணிக்கொடி' எழுத்தாளரும் 'எழுத்து' ஆசிரியருமான சி. சு. செல்லப்பா அவர்களுக்கு இவ்வாண்டு (1991) செப்டம்பர் இறுதி வாரத்தில் 80-ஆம் வயது தொடங்கியது. தரமான இலக்கியத்திற்கும் திறனாய்வுக்கும் பெரும் பங்காற்றியுள்ள சி. சு, செல்லப்பா அவர்களைப் பற்றி ஒரு நூலே எழுதலாம்; அவ்வளவு அருமையான, முக்கியமான செய்திகள் அவர் வாழ்வில் உள்ளன. 60 ஆண்டுகளுக்கு முன் மதுரைக் கல்லூரியில் பி.ஏ. படித்துக்கொண்டிருந்த பொழுது, காந்தியடிகளின் தேச விடுதலை இயக்கத்தால் ஈர்க்கப்பெற்று, படிப்பைத் துறந்தார்; விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுமாறு 'சுதந்திர சங்கு' - அவரை அழைத்தது.

இளம் வயதிலேயே அரும்பிவிட்ட இலக்கியத்தாகம், அவரைச் சென்னை நோக்கி இழுத்தது. சுமார் 50 ஆண்டுகளுக்குமேல் முழுநேர எழுத்தாளராகச் சென்னையில் வாழ்ந்துவிட்டு சென்ற ஆண்டில்தான் மதுரையில் தமது மகனுடன் வசிக்கத் தொடங்கினார். மகாகவி பாரதியாரின் மரபில் வந்த 'மணிக்கொடி' எழுத்தாளர்களில் தலைசிறந்த ஒருவரான சி. சு. செல்லப்பா, பேரறிஞர் வ. ரா. வின் சீடர்.

- தி. க. சிவசங்கரன்

படிப்பகம்

www.padippakam.com

# சி. சு. செல்லப்பா

மணிக்கொடி எழுத்தாளரும், சுதந்திரப் போராட்ட வீரருமான இவர் எதையும் தன் சொந்தக் காலில் நின்று சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவர். இவர் வத்தல குண்டில் பிறந்தவர். புதுக் கவிதையில் விருப்பம் உடைய இவர் புதுக் கவிஞர்களை அடையாளம் காட்டித் தன் 'எழுத்து' இதழில் எழுத வைத்தார். இவரால் புதுக்கவிதை ஒரு இயக்கமாக 'எழுத்து' மூலம் நடந்து, ஒரு புது கவிதை காலகட்டம் அமைந்தது. இலக்கிய உலகம் இவரை ஒரு நாவலாசிரியராக, சிறுகதை ஆசிரியராக, புதுக்கவிதைக்காரராக, விமர்சனக் கட்டுரையாளராக, புத்தகப் பதிப்பாளராக பத்திரிகை ஆசிரியராக ஏற்றுக் கொண்டுள்ளது.

'இலக்கிய விமர்சனம்' என்ற துறை வளர்ச்சிக்காக 1959 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இவரால் ஆரம்பிக்கப்பட்ட 'எழுத்து' இதழ் பதினோறு ஆண்டுகள் இலக்கியப பணி புரிந்தது. எழுத்துவின் மறுபிறப்பான 'பார்வை' இதழ் மே 1972 முதல் மாதம் ஒரு புத்தகமாக மலர்ந்தது. பிறகு 'இலக்கிய விகாரம்', 'சுவை' என்ற இதழ்களும் இவரால் படைக்கப்பட்டன.

ஏழு சிறுகதைத் தொகுதிகளும், கைதியின் கர்வம், செய்த கணக்கு, பந்தயம், ஒரு பழம், நீர்க்குமிழி, பழக்க வாசனை; என்ற சிறுகதைத் தொகுப்புகளும், மாற்று இருதயம், நீ இன்று இருந்தால் என்ற கவிதைத் தொகுப்புகளும் காற்று உள்ள போதே ஏரிக்கரை, குறித்த நேரத்தில், எல்லாம் தெரியும், என்ற கட்டுரை தொகுப்புகளும், ஜீவனாம்சம் என்ற நாவலும், முறைப் பெண் என்ற நாடகமும், இவரால் எழுதப் பட்டன.

இவரது எழுத்து பிரசுரத்தில் ந. பிச்சமூர்த்தி, வல்லிக்கண்ணன், துரை சீனிச்சாமி, கே ராஜகோபால் போன்றவர்களின் படைப்புகள் புத்தகங்களாக வெளியிடப் பட்டன. எழுத்து பிரசுரத்தில் 1977ல் வெளியான வல்லிக்கண்ணன் எழுதிய 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற ஆய்வு நூல் சாகித்திய அகாடமி பரிசு பெற்றது. எழுத்து பிரசுரங்களை அறிமுகப்படுத்த வ. க. வுடன் தென் மாவட்டங்களில் இவர் பயணம் செய்தது இவரின் இலக்கிய தாகத்தை வெளிப்படுத்துகிறது.

இதழாளரும், இலக்கியவாதியுமான இவரைப் பற்றி குறிப்பு வெளியிடுவதில் 'சிற்றிதழ் செய்தி' - மகிழ்வடைகிறது.

---

ஒரு வேண்டுகோள் : சிற்றிதழ் செய்தி, ஆண்டுக்கு ஆறு இதழ்கள் வெளிவரும். இவற்றைப் பெற ரூ 15 / நன்கொடையாக அனுப்புங்கள். தனி இதழ் பெற விரும்புவோர். ரூ 2. 50 க்கான அஞ்சல் தலை அனுப்பினால் போதும்.

படிப்பகம்

www.padippakam.com

# ஏன் இந்த சிற்றிதழ் செய்தி?

அன்புக்குரிய நண்பர்களுக்கு,

'சிற்றிதழ் செய்தி' என்ற இந்த இதழின் தனி நோக்கங்களாகச் சிலவற்றைக் கருதுகிறேன். மணிக்கொடிக்கு முன்பே தமிழ்ச் சிற்றிதழ்களின் வரலாறு தொடங்கிவிட்டது. இன்றுவரை சிற்றிதழ்கள் தொடர்ந்து வெளியாகின்றன. இவை அனைத்தையும் சேர்த்து வைத்துப் பாதுகாக்க வேண்டும், இவை பற்றிய ஆராய்ச்சியை ஊக்குவிக்க வேண்டும், இவற்றை மேலும் தமிழ் வாசகர்கள் மத்தியில் பரவலாக்க வேண்டும், தொடர்ந்து புதியதாக வெளிவரும் சிற்றிதழ்கள் பற்றிய செய்தியை தெரிவிக்க வேண்டும், இவற்றின் தரம் உயரவேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு 'சிற்றிதழ் செய்தி' செயல்பட விரும்புகிறது. படைப்பாளிகளுக்கும், வாசகர்களுக்கும் இது ஒரு பாலத்தை ஏற்படுத்த விரும்புகிறது. சிற்றிதழ் என்றால் என்ன? கலை, இலக்கிய வரலாற்றில் சிற்றிதழ்களின் பங்கு என்ன? இவை பற்றியெல்லாம் வாசகர்களின் கவனத்தை தூண்டுவதும் இந்த இதழின் நோக்கம். இவற்றுக்கெல்லாம் வாசக நண்பர்களின் ஒத்துழைப்பை வேண்டுகிறேன். நான் இதுவரை 1320 வகை சிற்றிதழ்களைச் சேகரித்துள்ளேன். மிகச்சில இதழ்களின் அனைத்து படிகள் மட்டுமே இதுவரை என்னால் தொகுக்கமுடிந்தது, எதிர்காலத்தில் சிற்றிதழ் ஆய்வுக்கு என ஒரு களத்தை உருவாக்க விரும்புகிறேன். ஆகவே இதற்காக நண்பர்களின் ஒத்துழைப்பை வேண்டுகிறேன். இது முதன்மையாக ஒரு செய்தி இதழ். செய்திகளைத் தருவதோடு, சில படைப்புக்களையும் இந்த இதழ் வெளியிடும்.

நண்பர்கள் தங்களிடமுள்ள பழைய சிற்றிதழ்கள் பற்றிய செய்திகளை எனக்கு தெரிவிக்க வேண்டுகிறேன். என்னிடம் இல்லாத இதழ்களை, என்னிடம் சேர்ப்பதன் மூலம், எதிர்காலத் தலைமுறையினருக்கு, சிற்றிதழ்களையும் அவற்றின் ஆக்கப் பணியையும் நீங்கள் சேர்ப்பிக்கிறீர்கள். இதுபற்றி நீங்கள் உறுதி கொள்ளலாம். ஆகவே மீண்டும் உங்களை இறைஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தங்களிடமுள்ள இதழ்கள் பற்றி எனக்கு எழுதுங்கள். என்னிடம் இல்லாத இதழ்களைக் கொடுத்து உதவுங்கள். சிற்றிதழ் செய்தியை நண்பர்களுக்குத் தெரிவியுங்கள். இதழ் ஆசிரியர்களுக்கும் ஓர் வேண்டுகோள். சிற்றிதழ் செய்தி பற்றி தங்கள் இதழிலும் வெளியிடுங்கள்.

என்றும் அன்புடன்
பொள்ளாச்சி நசன்

படிப்பகம்

www.padippakam.com



தலைமுறை இலக்கிய வாசகனுக்கு இருபதாம் நூற்றாண்டு பிதுரார் ஜிதம் கிடைக்க வேண்டாமா? விட்டுச் செல்ல வேண்டியது நம் கடமை, பொறுப்பு இல்லையா? தவறினால்?

'மெல்லத் தமிழ் இனிச் சாகும் என்றந்த பேதை உரைத்தான் என்று பாரதி யார் மீதோ சீறி விழுந்தானே - அந்த பேதையின் வாக்குதான் பலித்து விடும். இருபத்தோராம் நூற்றாண்டுக்கு போகாது. இந்த நூற்றாண்டு இலக்கிய வளம் சுவடு தெரியாது போய்விடும். எனவே இதுவரை விழித்துக் கொள்ள தவறி விட்டாலும், ஆங்கிலத்தில் 'லெவுன்த் ஹவர்' என்பார்களே அந்த மாதிரி இந்த கடைசி நிமிஷத்திலாவது சுதாரித்து எழவேண்டும். செயல்பாடு தேவை. யார் செய்வது, என்ன செய்வது, எப்படி செய்வது என்ற கேள்விகள் எழும், இதை செய்ய வேண்டியர்கள் பொதுவாக தமிழ் இனம் என்று பெருமை பேசிக் கொள்ளும் நாம் தான். மொழிக்காரர்கள், இலக்கியவாதிகள், படைப்பாளிகள், திறனாய்வாளர்கள், பிரசுரகர்த்தர்கள், கல்லூரி தமிழ்துறையினர், தமிழ் பத்திரிகைக்காரர்கள் இவற்றிற்கெல்லாம் மேலாக தமிழக பல்கலை கழகங்கள் ஆகிய பிரிவினர் தான்: வேறு யார் வெளி நாட்டார் வந்து நமக்காக நம் காரியத்தை கரிசனத்துடன் செய் வார்கள்? நூற்றுண்டுகளுக்குமுன் அரைகுறை தமிழ் படித்த மேல் நாட்டு பாதிரிகள் நம் பழைய இலக்கியம், கலாச்சாரம், வரலாறு பற்றி குட்டை குழப்பியதெல்லாம் போதாதா? வெட்கக்கேடு!

இன்னொரு விஷயம். இன்று தமிழகத்தில் பல்கலைக் கழகங்கள் பெருகிவிட்டன. இன்னும் கொஞ்சகாலம் போனால் ஜில்லாவுக்கு ஒன்று வந்து விடலாம். ஆனல் பெருகிப் பயன் என்ன? தமிழுக்கு என ஒரு பல்கலை கழகம் கூட வந்து விட்டாலும் தற்கால தமிழ் இலக்கியத்துக்கு இன்னும் விமோசனம் பிறக்கவில்லை. பல்கலைக் கழங்களில் தமிழ்த்துறையில் காட்டப்படும் சிரத்தைமாற்றுத்தாய் அக்கறைதான். ஏதோ புண்ய வசத்தால் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் துணை வேந்தர் பதவி காலத்தில் மதுரையில் ஒரு விழிப்பு ஏற்பட்டது. இப்போது அதுவும் 'கழுதை தேய்ந்து கட் டெறும்பான' கதையாகி விட்டது. மற்ற பல்கலைக் கழகங்களும் பழைய பண்டிதபாணி போக்கில்தான் நடைபெறுகின்றன. பழைய இலக்கியம் பற்றிய ஆராயத்தக்க விஷயாம்சங்கள் தீர்ந்து போய் விட்டதால், 'தீஸிஸ்'-ஸுக்காக தற்கால இலக்கியம் பற்றிய விஷ யங்களை எடுத்துக் கொண்டு அதையும் பழைய பாணியிலேயே நச்சுப்படுத்துகிறார்கள். ஒரு 'தீஸிஸ்' கூட காசு பெறாது. நான் தெரிந்தே சொல்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



மேல்நாட்டு இலக்கிய பரிச்சயமோ, இலக்கிய விமர்சன தற்கால நியதிகள் பரிச்சயமோ இம்மியும் கிடையாது. அங்கே உள்ள செல்லாகாசாகிவிட்ட சொத்தையான முறைகளை காபி அடித்துகொண்டிருக்கிறார்கள் படைப்பு, படைப்பாளிகளையும் தெரிந்து கொள்ளாமலேயே ஆராய்ச்சிகள்! இந்த லட்சணத்தில் 'மெதடாலஜி' யாம். என்ன முறைவழியோ! இந்த அவலநிலையுல் தற்கால இலக்கியம் மதிப்புள்ள கணிப்புகளை எப்படி பெறமுடியுய்? இந்த நிலை மாற உடனடியாக வழி வகை கையாளப்பட்டாலொழிய தற்கால தமிழ் இலக்கியம் அதோ கதிதான். தற்கால தமிழ் ரசனை புத்துணர்ச்சி பெற தற்கால தமிழ் இலக்கியம் அதுக்கு உரிய அந்தஸ்தை அடைய எதிர் காலத்துக்கு இந்த நூற்றாண்டு இலக்கிய மரபு தெரிய வர மரபு அறிந்து, மரபு மீறி புதுஇலக்கிய சோதனே முயற்சிகள், அடுத்த நூற்றாண்டில் தோன்ற ஏது ஆக, இந்த நூற்றாண்டு இலக்கிய களம் வகை செய்ய தவறி விட்டது என்ற பழியை அடுத்த நூற்றாண்டு நம்மீது சுமத்தாமல் இருக்க, நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற ரோஸ உணர்வுடன் செயல்பட வரலாற்றுக்கண் நமக்கு இன்று உடனடித் தேவை.

நன்றி 'சுவை' புத்தகங்கள் 3 (1985)

---

50 ஆண்டுகளுக்குமேல், தமிழ் இலக்கியப் பணிகளுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்த திரு வல்லிக்கண்ணன் அவர்களின் 71-வது ஆண்டு பிறந்தநாள் விழாவும் நிதியளிப்பும் நவம்பர் 12-ல் சென்னை மயிலாப்பூர் சீனிவாச சாஸ்திரி அரங்கில் நடைபெறுகிறது. தமிழ் இலக்கிய வாசகர்கள், படைப்பாளிகள், அனைவர் சார்பிலும் மனமார்ந்த வாழ்த்துக்களை வ. க. அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

**தமிழ் சிற்றிதழ்கள் சங்கம்** (பதிவு எண்: 19/91)

கடந்த 4வருடங்களாக தமிழ் சிற்றிதழ்கள் சங்கம் (TASNA) செயல்பட்டு வருகிறது. இது மானுடமேம்பாட்டிற்கான செய்திகளை, தகவல்களை கலை இலக்கிய வடிவங்களில் மக்களுக்கு அளிக்கும் சிற்றிதழ்களின் பரஸ்பர கூட்டமைப்பே ஆகும். 86 - இதழ்களின் இணைப்பான இச்சங்கம் இனிது வளர வாழ்த்துகிறோம்.

தலைவர் ; **குன்றம். மு. இராமரத்நம்**
பொருளாளர் ; **ராஜா சொர்ணசேகர்**

படிப்பகம்

www.padippakam.com



# வலிமை நிறைந்த சக்தி

- வல்லிக்கண்ணன்

சிறுபத்திரிகைகள் என்றும் அதிக விற்பனையுள்ள ஜனரஞ்சக பத்திரிகைகளுக்கு எதிரான சக்தியாகவே விளங்கும்.

ஜனரஞ்சகப் பத்திரிகைகள் என்றும் பல்சுவைப் பொழுது போக்கு இதழ்கள் என்றும் அறியப்படுகிற வணிக நோக்குப் பத்திரிகைகள் அதிகபட்ச எண்ணிக்கையை தொடுவதிலேயே கருத்தாக இருப்பவை. வாசகர்களின் தரம் உயரவேண்டும் என்பது அவற்றின் குறிக்கோள் இல்லை. கலை, இலக்கியம் போன்றவற்றின் வளமும் வளர்ச்சியும் பற்றியும் அவற்றுக்கு அக்கறை கிடையாது. வாசர்களின் எண்ணிக்கையைப் பெருகச் செய்து, அப்பெருவாரியான விற்பனையின் மூலம் தங்கள் வருமானத்தையும் அதன் மூலம் லாபத்தையும் அதிகப்படுத்தவேண்டும். இது தான் வியாபார நோக்குப் பத்திரிகைகள் நடத்துகிறவர்களின் குறிக்கோள்.

இந்த நோக்கிற்குக் கலை, இலக்கியம், அரசியல், சமூக விவகாரங்கள் எல்லாம் அவர்களுக்கு உதவுகிற சாதனங்களாகவே கையாளபடுகின்றன. வாசகர்கள் எனப்படுவோர் பத்திரிகை அதிபர்கள் கொடுக்கிற சரக்குகளை வாங்கி பயன்படுத்தக் கூடிய 'நுகர்வோர்' தான்.

சிறுபத்திரிகைகள் அடிப்படையிலேயே வித்தியாசமான நோக்கு பெற்றிருப்பவை. அதிகமான விற்பனையை அவை கருத்தில் கொள்வதில்லை. கலை, இலக்கியம் முதலியவற்றை தரம் உணர்ந்து சுவைக்கக்கூடிய நல்ல ரசிகர்களைப் போய் சேரவே அவை விரும்புகின்றன.

தரமான, கனமும் ஆழமும் நிறைந்த, நல்ல விஷயங்களை சேகரித்துக் கொடுப்பதிலேயே கருத்தாக இருக்கின்றன சிறந்த சிறுபத்திரிகைகள். கலை, இலக்கிய வளர்ச்சிக்காக அவை தம்மால் இயன்ற அளவு பணிபுரிய முயல்கின்றன. சமூகப் பிரச்னைகளை அலசி ஆராய விரும்புகின்றன. சிந்தனை ஒளி பரப்பி வாசகர்களையும் சிந்திக்கத் தூண்டுவதில் நாட்டம் உடையவையாக இருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



கலை, இலக்கியம் முதலியவற்றில் புதுமை சேர்க்கப் பாடுபடுகின்றன சிறுபத்திரிகைகள். திறமையும் உழைப்பாற்றலும் உற்சாகமும் உடைய இளைய படைப்பாளிகளுக்குத் தேவைப்படுகிற தளத்தை அமைத்துத் தருகின்றன. அதன் மூலம் புதிய படைப்பாளிகளை ஊக்குவித்து, கலை இலக்கியங்களில் புதிய ஒளி பாய்ச்சும் சாதனங்கள் ஆகின்றன.

சுய சிந்தனையும், படைப்புத்திறனும், புதுமை வேகமும் கொண்ட இளைஞர்கள் பலர் சிறுபத்திரிகைகளின் துணையினால் தான் தங்கள் ஆற்றலையும் உழைப்பையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இனியும் இத்தகையவர்களுக்கு சிறுபத்திரிகைகள்தான் பெரிதும் துணைபுரியும் – துணைபுரிய வேண்டும்.

சிறுபத்திரிகைகள் என்று சொல்லிக் கொண்டு வெளிவருகிற அனைத்துமே சிறந்த பத்திரிகைகள் ஆகிவிடும் என்று சொல்வதற்கில்லை. அவற்றிலும் குறிப்பிடத் தகுந்த தரமும் தனித்தன்மையும் பெற்றவைதான் சிறப்படைய முடியும்.

இதற்கு நாமும் பத்திரிகை நடத்தி, பத்திரிகை ஆசிரியர் ஆகிவிட வேண்டும் என்ற ஆசை மட்டும் இருந்தால் போதாது. அப்படி நல்ல பத்திரிகை உருவாக்க, பத்திரிகை வெளியிடுவோர் தங்களைத் தாங்களே தகுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். தங்கள் ரசனையை, படிப்பறிவை, சிந்தனைத்திறனை வளர்த்தாக வேண்டும். சாதாரணங்களில் திருப்தி அடைந்து விடாது, உயர்ந்தவற்றையும் உன்னதங்களையும் எட்டிப்பிடிக்கவும், கொண்டு சேர்க்கவும் உழைக்க வேண்டும்.

ஆற்றலும் தகுதியும் உழைப்பும் நம்பிக்கையும் பெற்றிருப்பவர்கள் கையில்தான் சிறுபத்திரிகைகள் வலிமை மிகுந்த சக்தியாக மிளிர முடியும்.

அத்தகையவர்கள் தங்களைத் தாங்களே வெளிப்படுத்திக் கொள்ளவும், கலை இலக்கியம் முதலியவற்றில் புதுமையும் வளமும் சேர்ப்பதற்கும் சிறுபத்திரிகைகள் துணை புரியமுடியும்.

இவ்விதமான தனித்தன்மை பெற்று, கால ஓட்டத்திலும் நிலை பெற்று நிற்கும் படியான சக்தியாக சிறுபத்திரிகை திகழ வேண்டும். அப்படிப்பட்ட சிற்றிதழ்களே தரமான வாசகர்கள் நெஞ்சில், நினைவில், என்றும் நிலைத்து நிற்கும். ★

படிப்பகம்

www.padippakam.com



# சிறுபத்திரிகை : ஓர் அறிமுகம்

- கோ ராஜாராம்

சிறுபத்திரிகை வரலாற்றையும் போக்குகளையும் விளங்கிக்
கொள்ள முயற்சி செய்யும் போது, நம் முன்னால் முதற்கேள்வியாக
நிற்பது, சிறு பத்திரிகை என்றால் என்ன, என்கிற கேள்விதான்.
சிறு பத்திரிகையின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் இருப்பை
யும் பணிகளையும், கோட்பாட்டளவில் புரிந்து கொள்ள அடிப்
படையில் இரண்டுவகை பார்வைகள் நமக்கு முன்னால் வருகின்றன

முதலாவது: சிறுபத்திரிகை, மனிதனின் இடையறாத
தேடலின் குறியீடு. எல்லாக் காலங்களில், வெறும் சமூக நியதியை
யும், மரபாக்கப்பட்டு விட்ட கட்டுப்பாடுகளையும் கேள்விக்குள்ளா
கிற சில மனிதர்கள் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள். சுய
மாகச் சிந்தித்து வாழ்வின் நிரந்தர கேள்விகளுக்கு விடை தேடிப்
புறப்படும் இவர்கள், மரபைக் கேள்விக்குள்ளாக்குவதும், பழைய
மரபின் அடிப்படைகளைத் தகர்க்க முயல்வதும், இதன் பலனால்
பழையமரபுகள் தகர்ந்து புதியமரபுகள் உருவாவதும் வரலாற்றின்
போக்கு ஆகும். இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால் கணியன்
பூங்குன்றனும், இளங்கோவும், வள்ளுவனும், இன்று நம் 'சிறு
பத்திரிகை உளவியல்' என்று குறிப்பிடக் கூடிய ஒரு சிந்தனை
தளத்தில் நின்று இயங்கினர்கள் என்று கருதலாம். இந்த விளக்கம்
மிகவும் பொதுத்தன்மையுடன், சிறு பத்திரிகை என்கிற இருபதாம்
நூற்றாண்டு நிகழ்வை, குறிப்பிட்ட காரணிகளால் விளக்க வழி
வகுக்காமல் நிற்கிறது.

இன்னொரு விளக்கப் குறிப்பாகச் சில சிறுபத்திரிகைச் செயல்
பாட்டைக் குறிப்பது. கல்வியின் பரவுதலும், படிக்கத் தயாராய்
உள்ள ஜனப்பரப்பு ஒன்று உருவாவதும், பத்திரிகைகளுக்கு ஒரு
தேவை உருவாவதும், இவற்றை ஒட்டி பத்திரிகைகள் வியாபார
நோக்கம் பெறுவதும் நிகழ்கிற கால கட்டத்தில் தவிர்க்க முயலா
மல் பத்திரிகைகள் பெரும் பத்திரிகைகள் ஆகின்றன. பெரும்
பத்திரிகைகள், படிக்கக்கூடிய வாசகர்கும்பலைத் திருப்தி செய்ய
எழுத்து உற்பத்தி பண்ணத் தொடங்குகின்றன. இங்கு, இத்தகைய

---

1990 நவம்பர 9, 10, 11 - தேதிகளில் மதுரை காமராசர்
...லைக் கழகத் தமிழியல் துறையும் தமிழ்ச் சிறு பத்திரிகைகள்
...பும் இணைந்து நடத்திய எண்பதுகளில் படைப்பிலக்கியம்
...தரங்கில் வாசிக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



உற்பத்திக்கு உயர்மட்ட ரசனையை அளவுகோலாய்க் கொள்ள முடியாது. சிறிதே படித்த வாசகனையும் திருப்தி செய்ய வேண்டியது பெரும் பத்திரிகைகளின் வியாபாரக் கடமை. அவற்றைப் பொறுத்த வரையில் எழுத்து ஒரு பண்டம். கேளிக்கைக்காக, வாசகன் என்கிற வாங்குபவனைத் திருப்திப் படுத்த, எத்தகைய கோணங்கித்தனமும் செய்யத் தயாராய் பெரும் பத்திரிகைகள் இயங்குகின்றன.

இத்தகைய மலினப்படுதலுக்கு எதிர்ப்பாகத்தான் சிறு பத்திரிகை தோற்றம் பெறுகிறது. எனவேதான் பாரதி வாழ்ந்த கால் கட்டத்தில் பத்திரிகைத் துறையும் வாசிப்புப் பழக்கமும் பெருகிப்பரவாத நிலையில் சிறுபத்திரிகை என்கிற கருத்தாண்மை தோன்றவில்லை. பத்திரிகை வியாபார நோக்கம் வலுப்பெறாத காலம் அது.

ஆனால் முப்பதுகளில் நிலை வெருவாக மாறிவிட்டது. 1920க்கு முன்னரே பாரதி தூவிய வித்து முப்பதுகளில்தான் முளையிட்டு எழுந்தது' என்பார் வல்லிக்கண்ணன். 'தமிழ்ப் பத்திரிகை உலகில் அந்நாட்களில் தலையெடுத்த இந்த மனோபாவங்களை கு. ப. ராஜகோபாலன் ஒரு கட்டுரையில் தெளிவாக எழுதியிருக்கிறார். அதிகமான கவனிப்பையும், வரவேற்பையும் பெற்றது 'விகட மனோபாவம்'. வாழ்க்கையின் மேலோட்டமான அம்சங்களை கவனிப்பதே இதன் நோக்கம்.

வாழ்வின் துன்ப துயரங்கள், ஏமாற்றங்கள் எல்லாம் இருந்தாலும் இலக்கியத்தில் அவற்றுக்கு இடம் கொடுக்க வேண்டியதில்லை. உண்மையில் அவற்றை மறப்பதற்காக, பொழுதை இன்பமாகப் போக்குவதற்காகத்தான் இலக்கியம் படைக்கப்பட வேண்டும். சுபம், இன்பம், சந்தோஷம் இவற்றுக்காக மட்டுமே எழுத்து பயன்பட வேண்டும். இது விகட மனோபாவம். இதற்கு நேர்மாறானது மணிக்கொடி மனோபாவம். வாழ்க்கையின் அடிமட்டம் வரை துருவி ஆராய வேண்டியதுதான், எல்லா உணர்ச்சிகளையும் பிரதிபலிப்பதுதான் இலக்கியத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். இதில் கசப்பும், சோகமும் முக்கிய இடம் பெறுவதைத் தவிர்க்க முடியாது. எழுத்தில் அழுத்தமும், கனமும், ஆழமும் சேர்க்கப்பட வேண்டியது அவசியமாகும்.

ஆரம்பகால 'மணிக்கொடி' தான் சிறுபத்திரிகை இயக்கத்தை ஸ்தாபித்தது, பின்னால் அறுபதாண்டுகளுக்கு சிறுபத்திரிகை

படிப்பகம்

www.padippakam.com



இயக்கத்தின் போக்கையும் நிர்ணயித்தது என்று சொன்னால் மிகையல்ல. ஒரு முக்கிய வித்தியாசம், ஆனால் மணிக்கொடிக்கும் பின் வந்த பத்திரிகைகளுக்கும் உண்டு. தன்காலத்தில் பெரும்பத்திரிகை பிரதிநிதியான கல்கி கிருஷ்ணமூர்த்தியின் அரசியல் பார்வையுடன் வெகுவாக மணிக்கொடி முரண்பட்டிருக்கவில்லை. தேசவிடுதலை, காந்தியம் போன்ற பொது லட்சியங்களை, சிறுபத்திரிகை, பெரும் பத்திரிகை இரண்டுமே ஏற்றுக் கொண்டிருந்தாலும் கூட, இலக்கியம் என்று வந்த பொழுது இரண்டு துருவமாகிப் போனார்கள்.

எனினும் மணிக்கொடி காலத்தில் மணிக்கொடி சுத்த இலக்கியப் பத்திரிகையாய் வரவில்லை. 'மணிக்கொடி முதல் பதினெட்டு மாதம் ராஜீய வாரப்பதிப்பாக வெளியிடப்பட்டுவந்தது. பின்னர் தமிழ் இலக்கிய வளர்ச்சித் துறையிலிருந்த தேவையை உணர்ந்தும் மணிக்கொடி ஊழியர்களுக்கு இந்தக் துறையிலிருந்த உற்சாகத்தினாலும் மாதமிருமுறை சிறுகதைப் பத்திரிகையாக மாற்றப்பட்டது.

நவீன இலக்கியம், அதன் போக்குகள், விமர்சன அணுகுமுறைகள் பற்றி அவ்வப்போது சிறுபத்திரிகையில் தொடர்ந்த விவாதங்கள். சிறுபத்திரிகை இயக்கத்தின் சரித்திரத்தையும் அதனால் இலக்கியப் போக்கின் வெவ்வேறு திசைகளையும், முற்சொல்லலையும் நிர்ணயித்தன. அந்த விதத்திலும் மணிக்கொடிதான் முன்னோடி என்று சொல்லவேண்டும்.

மணிக்கொடியில், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், ஏ. என் சிவராமன், வ. ரா, கு. ப. ரா, பிச்சமூர்த்தி, சிட்டி, புதுமைப் பித்தன், அ சீனிவாசராகவன், வை. மு. கோதைநாயகி அம்மாள் ச. து. சு. யோகி, ராஜாஜி முதலிய பலரும் எழுதியுள்ளனர். அதில்லாமல் பிரேம்சந்த், தாகூர், காண்டேகர் போன்ற பிறமொழி எழுத்தாளர்களின் மொழிபெயர்ப்புகளும் வெளியாயின. இந்தப் பட்டியலைப் பார்க்கும்போதே தெரிகிற விஷயம் - மணிக்கொடி தரத்தை அளவு கோலாய்க் கொண்டதே தவிர, இவரைத்தான் பிரசுரிப்பேன் என்கிற பிடிவாதம் கொண்டதில்லை.

மணிக்கொடியில் நிகழ்ந்த முக்கிய விவாதமாக தழுவல் இலக்கியம் பற்றியதைக் காணலாம். அந்தக் காலத்தில் தழுவல் இலக்கியம் என்ற பெயரில், ஆங்கிலக் கதைகளை, தமிழ் வாசகர்களுக்கு தமிழ்ப் பெயர்களும் தமிழ்ச் சூழ்நிலையுமாக மொழி மாற்றம் செய்து வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள். இவர்கள் மூல ஆசிரியர் பெயரைச் சில சமயம் குறிப்பிடுவார்கள், சில சமயம்

படிப்பகம்

www.padippakam.com



வசதியாக பெயரை மறைத்துச் சொந்தக்கதை போலவே வெளியிட்டு விடுவார்கள். இந்தப் போக்கை எதிர்த்து மணிக்கொடி குரல் கொடுத்தது.

இதேபோல்தான் ஜனரஞ்சக எழுத்தும். மக்களை வாங்கச் செய்யவேண்டும் என்கிற ஒரே நோக்கத்துடன், அசட்டுத் துணுக்குகள், சுய பார்வையற்ற கோணங்குத்தனங்கள், அர்த்தமில்லாத சஸ்பென்ஸ்கள் இவற்றுடன் கதைகளும், நாவல்களும் வெளிவந்தன. நாவல், தொடர்கதை என்கிற உருவம் தரித்தது. ஒவ்வொரு வாரமும் கடைசி வாக்கியத்தில் அடுத்த வாரத்தை எதிர்பார்க்கிற ஆர்வத்தைத்தூண்டுவதற்காக எப்படிப்பட்ட அசட்டுத்தனத்தையும் எழுதத்தயாராய் இருந்தார்கள் இந்தத் தொடர் கதை எழுத்தாளர்கள். இத்தகைய இலக்கியத்துக்குப் புறம்பான உத்திகளால் படிக்கும் பழக்கம் பரவலாயிற்றேதவிர, நல்ல இலக்கியம் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. இந்தப் போக்கும் கூட சிறு பத்திரிகைகளின் கண்டனத்துக்கு உள்ளாயிற்று.

மணிக்கொடி நின்றபின்பு, க.நா சு. ஆசிரியராகி 'சூறாவளி' இலக்கிய வட்டம் இதழ்களை வெளியிட்டார். 'கலாமோஹினி' 'கிராம ஊழியன்' போன்ற பத்திரிகைகள் வெளிவந்தன. மணிக்கொடி பாதையில் இந்த ஏடுகள் தரமான இலக்கியத்தையும் சோதனை முயற்சிகளையும், மேலும் வளர்த்தெடுக்குமாறு செயல்பட்டன. இந்தக் கால கட்டத்தில் படைப்பிலக்கியங்கள் வெளியிட்டது போக, சிறு பத்திரிகைகளில் நடந்த விவாதம், புதுக்கவிதை பற்றியது.

★ சூறாவளி 1939 ஏப்ரலில் வெளிவந்தது. கலாமோஹினி 1942 ஜூலை மாதம் பிறந்தது. ஆசிரியர் சாலிவாஹனன் (வி. ரா. ராஜகோபாலன்) இலக்கிய வட்டம் 1938 நவம்பரில் தொடங்கப்பட்டது. கிராம ஊழியன் 15-8-1943 அன்று வெளிவந்தது. ஆசிரியர். திருலோக சீதாராம், கௌரவ ஆசிரியர். கு ப.ரா

வசன கவிதை என்று பாரதியார் காலத்தில் புதிய உருவம் பரிசோதனையை நிகழ்த்தியிருப்பினும், சூறாவளியில் தொடங்கிய வசன கவிதை விவாதம், கவிதையில் புதிய திசையை நிர்ணயம் செய்வதாய் அமைந்தது. புதுமைப்பித்தனும், கு. ப. ராவும் கூட சில கவிதைகள் எழுதிப்பார்த்தனர். 1939 லிருந்து பிச்மூர்த்தி 1945க்குப் பிறகு மீண்டும் புதுக்கவிதைகள் எழுதலானார்.

படிப்பகம்

www.padippakam.com



1959 சிறு பத்திரிகை இயக்கத்தில் மிகவும் முக்கியமான வருடமே. அந்த வருடத்தில்தான் சி. சு செல்லப்பா 'எழுத்து' பத்திரிகையைத் தொடங்கினார். எழுத்துக்கு முன்பு வந்தது 'சரஸ்வதி' இதழ். சிறு பத்திரிகை இயக்கத்தில் பிற்காலத்தில் எழுந்த அரசியல் சார்பு ஏடுகளும், கட்சி அரசியலைத் தாண்டி அரசியல் சிந்தனைகளைச் சமூக நோக்கின் ஓர் அங்கமாகக் காண்கிற பார்வையும் சரஸ்வதி தந்தது.

சக்தி பத்திரிகையில் துணை ஆசிரியராய் இருந்தவர். விஜய பாஸ்கரன், 1955 - மே மாதத்தில் 'சரஸ்வதி'யை தொடங்கினார். 'சரஸ்வதியுடன்' தொடர்பு கொண்டிருந்த பலரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு கொண்டிருந்தவர்கள். முற்போக்கு இலக்கியம், 'சரஸ்வதி' யின் முயற்சியால் விசேஷமான தெளிந்த பார்வையும், கலையழகும் கூட மிக முக்கியம் என்கிற பண்பு விளக்கத்தையும் பெற்றது.

''குறுகிய நோக்கோடு முற்போக்கு பிற்போக்கு அம்சங்களைக் கணித்து ஒதுங்கிப் போகாமல், மனித வளர்ச்சிக்குப் பாடுபடும் சகல சக்திகளையும் அரவணைத்துப் பேணுவதே சரஸ்வதியின் நோக்கம்''— என்று விஜய பாஸ்கரன் அறிவித்தார். சரஸ்வதியில் ஜெயகாந்தன், ரகுநாதன், கமில் ஸ்வெலபில், க. நா. சுப்பிரமணியம், தி. க. சிவசங்கரன், சுந்திர ராமசாமி, நா. வானமாமலை, சாமி. சிதம்பரனார், இ.ஜ. ரங்கநாதன் என்று சிறந்த எழுத்தாளர்கள் அனைவரின் எழுத்தும் இடம் பெற்றது.

அறுபதுகளில், சிறுபத்திரிகை இயக்கத்தை நிலை நிறுத்த 'எழுத்து' வெளிவந்தது. லா. ச. ராமாமிர்தம், சி சு. செல்லப்பா, க. நா. சுப்பிரமணியன், தருமுசிவராமு, வெ. சாமிநாதன், ந. சிதம்பரசுப்ரமணியன், சி. மணி, நகுலன், க. கைலாசபதி முதலிய பல எழுத்தாளர்களுக்கு 'எழுத்து' களம் அமைத்து கொடுத்தது. தன்னை இலக்கிய 'விமர்சனக்குரல்' என்று அறிமுகம் செய்து கொண்ட எழுத்து 'புதுக்கவிதை' பற்றிய விவாதத்தைத் தொடங்கி, புதுக்கவிதையை நிலை பெறச் செய்தது. புதுக்கவிதை இயக்கத்தில் தொடர்ந்து அக்கறை காட்டிய 'எழுத்து' அலசல் விமர்சனம், ரசனை விமர்சனம் பற்றிய விவாதத்திலும் ஈடுபட்டது. இதில் அலசல் விமர்சனம் சி. சு. செல்லப்பாவின் பாணி. அலசல் விமர்சனம் படைப்பின் 'முழுமை'யைக் காணத் தவறி விடுகிறது என்று க. நா. சு. ரசனை விமர்சனத்தை வலியுறுத்தினார். ஆனந்த குமாரஸ்வாமி, ரசிகமணி டி. கே. சி, ஆகியோ

படிப்பகம்

www.padippakam.com



ருக்கு க நா. சு. மலர் வெளியிட்டார். தம் 'இலக்கிய வட்டம்' ஏட்டில் க. நா. சு எலியட் முதற்கொண்டு வெளிநாட்டு இலக்கியச் சிந்தனைகளையும் நாவல், சிறுகதைகளையும் மேற்கோள் காட்டி எழுதினாலும், இந்தியத் தத்துவ ரசனை மரபை நிராகரிக்கவில்லை.

1968 அக்டோபரில் 'நடை' வெளிவந்தது. இதில் ஞானக்கூத்தன், ந. முத்துசாமி, அசோகமித்திரன், சி. மணி, வெ. சாமிநாதன், பிரமிள் முதலிய பலரின் படைப்புகள் வெளிவந்தன. வெ சாமிநாதன் மார்க்ஸிய் அடிப்படையிலான இலக்கிய விமர்சனத்தை எதிர்த்து எழுதிய நீண்ட கட்டுரையும், ந. முத்துசாமியின் நாடகங்களும் 'நடை'யின் மிக முக்கியமான பங்களிப்புகள். நவீன ஓவியம் பற்றிய சிந்தனையும் 'நடை'யில் வெளியாயிற்று.

1970- அக்டோபரில் 'கசடதபற' வெளிவந்தது. (ஆசிரியர் நா. கிருஷ்ணமூர்த்தி) தன்னை ஒரு வல்லின மாதஏடு என்று அழைத்துக் கொண்ட 'கசடதபற' வின்பணி சிறு பத்திரிகை வரலாற்றில் மிக முக்கியமானது. சார்வாகன், சா. கந்தசாமி, எஸ். ராமகிருஷ்ணன், ஐராவதம், வெ. சாமிநாதன், பிரமிள், ஞானக்கூத்தன், என்று ஒரு பெரிய புதிய எழுத்தாளர் பட்டியல் 'கசடதபற' தொடங்கி மிகத் தீவிரமாய்ச் செயல்படத் தொடங்கியது. 'கசடதபற' விற்கு பின்பு தான் சிறு பத்திரிகைகள் நிறைய வெளிவந்தன.

'கசடதபற' வில் நிகழ்ந்த முக்கிய விவாதம்: இலக்கியம் என்பது பிறகலைகளிலிருந்து தனித்து இயங்க முடியாது என்பது பற்றியது திரைப்படம், நாடகம், இசை என்று எல்லாக் கலைத்துறைகளுமே இலக்கியத்துடன் தொடர்பு கொண்டவை. இவை எல்லாம் இணைந்து தான் கலாச்சாரப் போக்கு உருவாகிறது. இலக்கியம் ஒன்றே எனது குறி என்கிற போக்குச் சரியல்ல, என்ற கருத்தின் விளக்கமாக, நாடகம், சினிமா, ஓவியம் என்று பல துறைகளையும் 'பற்றி, கசடதபற' வில் கருத்துகள் முன் வைக்கப்பட்டன.

எழுபதுகளில் எழுந்த இன்னொரு விவாதம் 'உள்வட்டம் வெளிவட்டம்'-பற்றியதாகும். ஒரு கலாசாரத்தில் மதிப்பீடுகளும் தீர்மானங்களும், உள்வட்டம் ஒன்றினால் தான் உருவாக்கப் படுகின்றன. வெளிவட்டம் அத்தகைய போக்குகளை ஏற்று, அதன் வழிச் செல்கிறது என்கிற கருத்தாக்கம் இது. இந்த கோட்பாடு முக்கியமாய் மார்க்ஸிய இலக்கிய வாதிகளால் எதிர்க்கப் பட்டது. நா. வானமாமலை தன் 'ஆராய்ச்சி' பத்திரிகையிலும்

படிப்பகம்

www.padippakam.com

அமைப்பியல் வாத இலக்கிய விமர்சன முறையும், Non-Linear writing என்று அழைக்கப்பபட்ட, கதை மறுப்பு இலக்கிய சோதனைகளும், இந்தக் கால கட்டத்தில் எழுந்த வித்தியாசமான முயற்சிகள்.

இந்த ஆண்டு வெள்ளிவிழாக் கொண்டாடும் 'கணையாழி' கடந்த 2 வருடங்களாக சிறுபத்திரிகை இயக்கத்தோடு இனங் கண்டு கொண்டு, புதிய நல்ல எழுத்தாளர்களின் படைப்பை வெளியிட்டு, சிறுபத்திரிகை இயக்கத்தை, சற்றுப் பரவலாக, ஜனங்களிடையே கொண்டு சென்றது பாராட்டத் தகுந்த முயற்சியாகும். தி. ஜானகிராமன், இந்திரா பார்த்த சாரதி, ஆதவன், சுஜாதா போன்ற பலரும் கணையாழியில் இடம் பெற்றனர். இதில்லாமல் அரசியல் பார்வைக் கட்டுரைகள், சமூகச் செயல்பாடு இவையும் கணையாழியில் இணைந்தது இங்கு கருதத்தக்கது.

சிறுபத்திரிகை இயக்கத்திற்கு அதன் தொடக்க காலத்திலிருந்தே இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் சரியான முறையில் ஆதரவு தெரிவித்து வளர்த்து வந்திருக்கிறார்கள். கே. டானியல், செ. கணேசலிங்கன், க. கைலாசபதி, கா. சிவத்தம்பி. செ. யோகநாதன், எம். ஏ. நுஃமான், எஸ், அகஸ்தியர், வ.ஐ.ச. ஜெயபாலன் சேரன், யேசுராசா, சிவசேகரப் பிரமிள் போன்ற பலரும் சிறு பத்திரிகைகளிலும் எழுதினார்கள். இதுமட்டுமின்றி, சிறுபத்திரிகைகளை இலங்கையில் பரவலான முறையில் அறிமுகம் செய்வித்தும் வந்திருக்கின்றனர்,

சிறுபத்திரிகை இயக்கத்திற்கு ஆதரவாக, தரமான நூல்களை வெளியிடுவதற்கு க்ரியா, அன்னம், வன்னி புக் ஹவுஸ், வயல், காவ்யா-போன்ற பல பதிப்பகங்கள் ஆங்காங்கு உருவாகியுள்ளன.

(அடுத்த இதழில் முடிவடையும்)

---

ஆசிரியர்களை நான் அடக்குமுறையின் சின்னமாகக் கருதுகிறேன். நீ இதை மீறினால் நான் உன்னை அடிப்பேன் என்று கூறும் போலீசுக்கும், நீ இந்த பாடபுத்தகக் குப்பையை உன் மண்டையில் ஏற்றாவிட்டால் நான் உன்னை அடிப்பேன் என்று கூறும் வாத்தியானுக்கும் இடையிலான வேறுபாட்டை என்னால் உணர முடியவில்லை. ஆரம்பக் கல்வியே இப்படித்தான் ஆரம்பிக்கிறது. எனது ஒன்றாம் வகுப்புமுதல் இன்றுவரை இப்போதும் இந்த வாத்தியார்மாருடன் முரண்பட்டுகொண்டுதான் இருக்கிறேன். ஆறாம் வகுப்பில் படிக்கும்போது ஒரு வாத்தியான் எங்களை நீசத்தனமாக அடிப்பான். முளங்கூடலில் கொண்டுபோய் நிறுத்திவிட்டு கம்பு வெட்டி முறிய முறிய அடிப்பான். அந்த வாத்தியானுக்கு எதிராக நோட்டுப் பேப்பரில் பேனா கொண்டு சில வாசகங்களை எழுதி அவன் வீட்டுச் சுவரில் ஒட்டினேன். என் முதல் வெளிப்பாடே இப்படித்தான் அமைந்தது. - குமாரசெல்வா

(நவம்பர் 91-நண்பர் வட்டம் - மாத இதழில் 'ஈஸ்டர் கோழி' என்ற சிறுகதை எழுதிய படைப்பாளர். 'உக்கிலு' என்ற சிறுகதைத் தொகுப்பை விரைவில் இவா வெளியிடவிருக்கிறார்.)

படிப்பகம்

www.padippakam.com



## மணிக்கொடி

★ முதற்கட்டம் : 1933 செப்டம்பர் முதல் 1935 சனவரிவரை, இக்காலகட்டத்தில் வ.ரா.வால் பதிப்பிக்கப்பட்டது. பரிசோதனை முயற்சியாக நடத்த பெற்று வந்தது. விமர்சனங்களும் கருத்துரைகளும் பிரதானமாக இடம் பெற்றன.

★ இரண்டாம் கட்டம் : 1935 மார்ச் முதல் 1938 பிப்ரவரி வரை பி. எஸ். ராமையாவை ஆசிரியராகக் கொண்டு முழுவதும் சிறுகதைச் சஞ்சிகையாக மணிக்கொடி வெளிவந்த காலம்.

★ மூன்றாம் கட்டம் . பி. எஸ். ராமையாவை சொக்கலிங்கம் விலக்கியபின் மணிக்கொடி வ. ரா. வின் கைக்கு மாறியது, சில வருடங்களுக்கு பிறகு நிரந்தரமாக நிற்றுபோய் விட்டது.

★ நான்காவது கட்டம் : 1950-ல் மணிக்கொடி மீண்டும் பி. எஸ் ராமையாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது.

நன்றி : முனைவன், 12. – (1 - 2 - 85)

## C. L. S. பதிப்பகம்

C. L. S. பதிப்பகம், தற்பொழுது வெளியிட்டுள்ள மு. பரமசிவம் எழுதிய 'எழுத்துச் செல்வர் வல்லிக்கண்ணன்' என்ற புத்தகத்தில் மணிக்கொடி எழுத்தாளர் 'கு. ப. ரா' வைப் பற்றி தெளிவாக எழுதியது போல் - மறைத்து எழுதிய 'ஆ' - 'ம' விவகாரம் என்ன?

'ஆ' - என்பது ஆனந்த விகடன். 'ம' என்பது மகாதேவன். இவர் தேவன் என்ற பெயரில் எழுதியவர். இவர் விகடனில் ஆசிரியராக வேலை பார்த்தார். தனது எழுத்துக்களை புத்தகமாக வெளியிடப் பெரிதும் ஆசைப்பட்டார். காப்பிரைட் உரிமை விகடனுடையது. பிரசுர உரிமையை எஸ். எஸ். வாசன் மறுத்து விட்டார். தேவன் அந்த மனக்குறையுடனேயே இறந்தார். அவர் வாழ்நாளில் ஒரு புத்தகம் கூட வரவில்லையே என்று மரண படுக்கையில் கூட புலம்பிக் கொண்டிருந்தார் என்று தெரிந்தவர்கள் சொன்னார்கள்.

## நிகழ் 18

நிகழ் 18 - க்காக இந்த நாட்களில் படிப்பதும் எழுதுவதுமாய் இருக்கிறேன். எதிர் பார்த்த கட்டுரைகள் சில கிடைக்கவில்லை. கட்டுரை கேட்டு எழுதி, எழுதி சலிப்பு ஏற்படுகிறது. மடியில் பாலை இறக்காமல், உடம்பில் வேறு எங்கோ பாலை அடக்கி வைத்திருப்பதை போன்ற நம் அறிவாளிகளிடம் கெஞ்சி கூத்தாடி, தொட்டு தடவி - பால் சுரக்க வைக்க வேண்டியிருக்கிறது. கடுமையான கேவலமான காரியம்.

– ஞானி, நிகழ் ஆசிரியர்

படிப்பகம்

www.padippakam.com



## சில சிற்றிதழ்களிலிருந்து...

### - வாசகர்களின் நினைவூட்டலுக்காக -

மனித மனத்தை மலினப்படுத்தக்கூடியதும், உன்னத விஷயங்களை தரம் தாழ்த்திக் கொச்சைப்படுத்தக் கூடியதும், எதிலும் மேலோட்டமான கிளர்ச்சியை மட்டுமே தூண்டக்கூடியதுமான அருவருக்கத் தகுந்த எழுத்துக்களையே தமிழ் பத்திரிகைகள், ஒப்பிட்டுப் பகுத்துரை சந்தர்ப்பம் பெறாத தமிழ் வாசகர்களின் மூளைக்குள், வாரா வாரம் திணித்துக் கொண்டிருக்கின்றன. மனித மூளையில் சிறு சலனத்தை ஏற்படுத்தக்கூடிய விஷயங்கள் அனைத்தும் இங்கு முற்றாக புறக்கணிக்கப்படுகின்றன. பத்திரிகை தர்மங்களோ, சமூக அக்கறையோ அற்ற லாப நோக்கம் மட்டுமே இங்கு பத்திரிகை துறையை ஆட்டிப்படைத்து கொண்டிருக்கிறது.

(தமிழ் பத்திரிகைகளின் தரம் பற்றி சுந்தர ராமசாமியின் குறிப்புகள் - புதுயுகம் - முதல் இதழ் ஜனவரி 1987)

---

**விமோசனம்**

- எஸ். கே. எஸ்

இரவெல்லாம் பொறிக்குள்
தவிபாகத் தவித்து
காலைநேரம்
மைதானத்தில்
திறந்து விட்டதும்
ஓடும் எலி
பள்ளி முடிந்து
வரும் பிள்ளைகள்.

கணய - 2 ஆகஸ்ட் 78

**புலன்களுக்கு அப்பால்**

காளி - தாஸ்

நான் ஏதோ மலையில்
கல்லுடைப்பதாக யெண்ணி
அனைவரும் அலட்சியமாகப்
பார்த்தனர்
அவர்களுக்குத் தெரியவில்லை
நான்
மலையை
உடைத்து கொண்டிருக்கிறேன்

'ழ' - 21 மே 82

**தோட்டம்**

அ. இராஜகோபாலன்

அந்த மயானத்தில்
ஆரவாரமின்றி
அரசமரியாதையின்றி
ஊர்வலம், ஊதல், ஓதல்
எதுவுமின்றி
அநாதைகளாய்
அடக்கம் செய்யப்பட்ட
விதைகளின
சமாதிகளில
நட்டுவைத்த சிலுவைகளாய்
நிற்கும் செடிகள
நினைவுச்சின்னங்கள்

விமர்சனம் ஜூலை 75

**வாக்குச்சீட்டு**

எ. ஜெயப்பிரகாசம்.

எனக்காக
அளிக்கப்பட்ட
பால் சோற்றை
நிலவைக் காட்டி
செவிலித்தாயே
சாப்பிட்டுவிடுகிறாள்.

ஐ - 2 (ஆண்டு மாதம்?)

படிப்பகம்

www.padippakam.com



ஹைக்கூ - பாஞ்சோ
தமிழில் சித்தார்த்தா.
என்ன தைரியம்
இந்த சுள்ளிக் கிளைகளுக்கு
வெட்டி கட்டிபோட்டிருந்தாலும்
மறுபடியும் துளிர்ப்பதற்கு
உயிர்மெய் 7 செப். 84

இலையை எங்கேபோட
எதிரெதிராய் எதிர்பார்ப்புடன்
மாடும், மனிதனும்-
- செ. ஆடலரசன்
எதிர்வு ஜூன் 90

# தற்பொழுது வரும் சிற்றிதழ்கள்:...

கனவு (சுப்ரபாரதிமணியன்) 9-3-363 Regimental Bazar, Secundrabad, A P-500025 மேலும் (நா. சிவசுப்பிரமணியன்) 9. ரயில்வே ஸ்டேசன் ரோடு, பாளையங்கோட்டை - 627002 விருட்சம் (அழகியசிங்கர்) 7 ராகவன்காலனி, மேற்கு மாம்பலம் சென்னை - 600033 மலர் (கி. வரதராஜன்) 273/11 - கணேஷ் நகர், 5 ஆம் வீதி, புதுக்கோட்டை மீட்சி, (பிரம்மராஜன்) Burn view, Coonoor Road, OOTY-1 புதிய நம்பிக்கை (பொன் விஜயன்) ஜென்னிராம் பிரஸ், 28, தெற்கு சிவன்கோயில் தெரு, சென்னை – 24 நண்பர் வட்டம், (சரோஜினி பாக்கியமுத்து) 56A/1, காலேஜ் ரோடு, பெருமாள்புரம், திருநெல்வேலி-7 நவீன நாரதர் (கே. பாலகங்காதரன்) 203, கிளிஞ்சல் மேடு, காரைக்கால் 5 கேரளத் தமிழ் (மாதவன்) திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம், தமிழ்ச் சங்கம் ரோடு, கிள்ளிப்பள்ளம், திருவனந்தபுரம் 2 நிகழ் (கி பழனிச்சாமி) 123, காளீசுவரர் நகர், காட்டூர் கோவை 9 தமிழ் பாவை (கருணைதாசன்) 15, சண்முகபுரம் முதல் தெரு, மதுரை 10 சூர்யோதயா (புனிதவதி) எண் 1, மகாலிங்கம் செட்டி ரோடு. மகாலிங்கபுரம், சென்னை 34 தன்னம்பிக்கை (இல. செ. கந்தசாமி) 16 சாஸ்திரி தெரு, தெரு எண் 1 P N புதூர், கோவை 41 புதிய குரல் (காந்தியம்மாள்) முல்லை நகர் முதல் தெரு, பீபி குளம், மதுரை 2 வளரும் தமிழ் உலகம் (மு ச சிவம்) D 121 சம்பத்து நகர், ஈரோடு 11 பாரதி (காரை சிவா) 114 பாரதிதாசன் நகர், முதலியார்பேட்டை, புதுச்சேரி 4 பாசறை (அ மு தமிழினியன்) 384, 5வது வீதி, காந்திபுரம் விரிவு கோவை 11 அறிமுகம், (இரா மலர்) 1/26 அரசு மேனிலைப்பள்ளி சாலை, கடத்தூர், தருமபுரி மாவட்டம் 3 கண்ணியம் (G. குலோத்துங்கன்) 210. இரண்டாம் தெரு, S R P காலனி, ஜலகர்

படிப்பகம்

www.padippakam.com

நகர். சென்னை 82, அரும்பு (பாக்கியராஜ்ராயன்), 18 வேலண்டன்ஸ் சாலை சென்னை 10 செந்தூரம் (K. ஜெகதீஷ்) 82-A குஜ்ஜிநாயக்கன் தெரு, வ. உ. சி நகர் அண்ணா நகர் கிழக்கு சென்னை 102, வாரமுரசு (அ. ராஜா சொர்ணசேகர்) 2. C நடராசா காலனி, சிவகாசி 23 அக்கினிக் குஞ்சு (இதயகீதன்) 40/2 விவேகானந்தா தெரு, உத்தமபுரம் - கம்பம் 16 முகம் (மாமணி) ஏ. பி 1042, 68வது தெரு, 11வது பிரிவு, கே. கே நகர் சென்னை 78 சிறுமலர் (கொடுங்குளம் ராஜேந்திரன்) கொடுங்குளம், மார்த்தாண்டம், குமரி 65 முல்லைச்சரம [பொன்னடியான்] 43 துரைசாமி கிராமணி சாலை, வடபழனி, சென்னை 26 கவிதை உறவு [ஏர்வாடி இராதாகிருஷ்ணன்] 4 முத்து முதலி தெரு; புரசை வாக்கம், சென்னை 7 தாராமதி [குன்றம் மு. இராமரத்நம்] புலமைப் பண்ணை கோவை - 7 குறள மணம் [செ. வரதராசனார்] 82 காந்தி சாலை, கள்ளக்குறிச்சி - 202 கதிரவன [மணிமொழி] சரோஜினி தெரு, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி. சுகன் [க. சு. சரவணன், 97 கீழத்தெரு, கணபதி நகர், தஞ்சவூர் 1 புதிய பூச்செண்டு [டி. மரியஜோசப்] நெ 61 விசாகத் தோட்டம் [பழைய மாம்பலம் சாலை] சைதாப்பேட்டை சென்னை 15 குறளியம் 3 மண்டபத் தெரு, ஈரோடு 1 நடுகல் 30 ஆண்டிகாடு, முருங்கப்பாளையம், திருப்பூர் 3 கவி 2 சிவன் கோயில் தெற்குத் தெரு, சிவகங்கை. ஒரு (எஸ். எல். நரசிம்மன்) 502 / கீழ ராஜ வீதி, மச்சுவாடி, புதுக்கோட்டை 1 கானுயிர் (S. முகமது அலி) 24/ மெயின் ரோடு, மேட்டுப்பாளையம் - 1 வெறுள கசைதி [D. மஞ்சுளா தேவி] D 20 ராமசாமி நகர், உடுமலை 126 அணு [கலைமகள்] 36F காந்தி வீதி, சிவகங்கை 60 அறிக்கைமலர் [P இளங்கோவன்] 29 வாடர் டேங்க் ரோடு, நாகர்கோவில் 1 காகிதம் [சௌ. மோகனகிருஷ்ணன்] 54 சுதர்சனம் தெரு, மஞ்சை நகர், கடலூர் 1 பூக்கூடை (தயானந்தன் பிரான்சிஸ்) P B No 501, பூங்கா, சென்னை 2 தீன் தமிழ் (முகமது மூசா) மீரா தமிழ் மன்றம், 45 வாழவந்தபுரம் தெரு. அருப்புகோட்டை 101 எழுகதிர் (அருகோபாலன்) 4/77 சுபேதார் தோட்டம், சென்னை 94 தமிழ் முனிவன் (மாசிலாமணி) அகத்தியர் இல்லம் 47 அரங்கப்பிள்ளை வீதி, புதுச்சேரி 1 ஹோமியோ நண்பன் (C அப்துல் சேகு) ஹெல்த் இன்ஸ்டிட்யூட், இந்தியா ஹவுஸ், காரைக்குடி 1 வெளி (ரெங்கராஜன்) 1415-2வது தெரு முதல் செக்டார். K K நகர், சென்னை 78 நீலகிரி நியூஸ் (K M செல்வராஜ்) அ. பெ. எண் 48, உதகமண்டலம், நீலகிரி 643001 பேதியின் சேதி Ruhsa Dept, CMCH, RUHSA (Po) N. A. Dt. திருப்பூர் செய்தி (P சண்முகவேல்) முதல் மாடி, 36 காமராசர் சாலை, திருப்பூர் 4 சலனம் (தி. கல்யாணராமன்) சென்னை பிலிம் சொஸைட்டி, 22 தாயார் சாகிப் 2வது தெரு, சென்னை 2

[விலாசங்கள் தொடரும்]

---

1990 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சிற்றிதழ்கள் மொத்தம் 59 இதழ்கள். இவற்றில் எட்டு இதழ்களே தற்பொழுது வெளிவந்து கொண்டிருக்கின்றன 1991 ஆம் ஆண்டில் அக்டோபர் மாத இறுதிவரை தொடங்கப்பட்ட சிற்றிதழ்களின் மொத்த எண்ணிக்கை 36 (விலாசத்துடன் கூடிய விளக்கம் அடுத்த இதழில் வரும். என்பார்வைக்கு வந்த இதழ்களே கணக்கிலெடுக்கப்பட்டுள்ளன

படிப்பகம்

www.padippakam.com

## நடப்பிலுள்ள சிற்றிதழ்களிலிருந்து சில வரிகள்

★ சந்திரத்தின் நடத்தைகள் மிகவிசித்திரமாகக் காணப்பட்டன. ஒன்றிற்கொன்று பொருத்த மற்ற காற்கோடுகளை அணிந்து கொண்டு வெளியே செல்வார். நண்பர்களை வீட்டிற்கு வர வழைத்து விட்டு அந்நேரம் பார்த்து எங்காவது கிளம்பி விடுவார். பலத்த மழை பெய்யும்போது கூட கலைந்த தலையுடன் நீண்ட தூரம் உலாவச் செல்வார். (கணிதவியலான் - சிறுகதை - அழகு சுப்ரமணியம் - கனவு காலாண்டிதழ். ஆகஸ்ட் 91)

★ ஹைக்கூ! கவிதை இலக்கியத்தில் இன்று புதிதாய் வந்து நுழைந்திருக்கும் புதிய முகம். அஞ்சாறு வார்த்தைகளுக்குள் வடிவக் காட்டும் குள்ளன், அர்த்தத்தெறிப்புள்ள சொற்பொறி! பொறியென்றால் பொறியேதான், ஒளிரணும், சுடரணும் பற்றிப் படரணும், சும்மா வந்து விழுவதற்கு வார்த்தை ஒன்றும் கரிக் கட்டை இல்லை பொறி, பஞ்ச காலத்தில் கிடைத்த பைசாவைப் போல் பயன்படுத்தணும் [ஹைக்கூவும், செலவடைக்கவியும் — மேலாண்மை பொன்னுச்சாமி, அக்னிக்குஞ்சு மாதஇதழ் அக் - நவ - 91)

★ மூன்று மாதங்களுக்கு முன்பு 'தினந்தந்தி' யிலிருந்து தொடர் கதை எழுதும்படி ஒரு அழைப்பு வந்தது. நான் சிறிது தயங்கினேன். தினந்தந்தி வாசகர்கள் அளவிற்கு கீழே இறங்கிப் போய் கதை சொல்ல முடியுமா என்று யோசித்தேன். வழக்க மான பார்முலா கதைகளைப் படித்துப் பழக்கப்பட்ட அடிமட்ட வாசகர்களிடம் என் எழுத்து எடுபடாது என்பது இப்போதும் என் நம்பிக்கை [என் கதைகளின் கதைகள் 22 சு சமுத்திரம். நண்பர் வட்டம் மாதஇதழ் - அக் - 91]

★ நாடக இலக்கியத்தில் புதியதொரு உத்வேகமும் கண்ணோட் டமும் ஏற்பட அக்கால அரசியல் சமுதாய சூழ்நிலைகளும் காரண மாக இருந்தன. யதார்த்த வாதத்தின் அடிப்படையில் இடது சாரிக் கொள்கைகளில் பாதிப்பில், சமகால வாழ்வை, அதன் ஏற்றத் தாழ்வைகளை, தனிமனித வாழ்வின் அவலங்களைக்கூட நாடகங்கள் சித்தரித்தன - [சமகால இந்தி நாடகங்கள் - சரஸ்வதி ராம்நாத் - வெளி - நாடக காலாண்டிதழ் - ஜூலை. ஆக - 91]

படிப்பகம்

www.padippakam.com

தனிச்சுற்றுக்கு மட்டும் தனியிதழ் ரூ. 2.50

★ எட்டிப்பார்த்தன கவிதைகள்
மண்டையோடுகளாய்!
கவிதைகளில் இனி சதையில்லை
கவிதைகளிலினி மூளையுமில்லை
காட்சிக்கு மட்டுமே வைக்கப்படும்
வெறும் ஓடுகளே கவிதைகள்!

நடுகல் - 3 அக் 91

★ நிறைய புது எழுத்தாளர்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள், நியூரைட்டிங் என்று கூறப்படும் இலக்கியம் பரவலாயிருந்தது. நாங்கள் கூட ஒரு வார பத்திரிகையை சுமார் ஒன்றரை வருடங்கள் நடத்தினோம். உருட்டச்சுமுறையில் 700 பிரதிகள் அடித்து விநியோகித்து வந்தோம். (கே. வி சுப்பண்ணு - பார்வையாளர்கள் கருத்து எனக்கு முக்கியமல்ல – சலனம் - அக் - நவ - 91)

★

PRINTED BOOK.

To

.................................................................

.................................................................

.................................................................

.................................................................

ஆசிரியரும், வெளியிடுபவரும் : பொள்ளாச்சி நசன்
சம்பத் நகர், சூளேஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி-642006
அச்சாக்கம் : குன்றம், மு. இராமரத்நம், உறவு அச்சகம்,
புலமைப் பண்ணை, சுகர்கேன் அஞ்சல், கோவை - 641007

படிப்பகம்